# பக்தியும் மனிதமேம்பாடும் ஆன்மீகத்தில் உள்ள நிலைப்பாடு என்ன ?



சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email:- thiruppalli@yahoo.com & pambanswamigalenguru@gmail.com
Web details:- www.pambanswamigal.org or pambanswamigal.net
கைபேசி எண்:– 94449 58526

பத்தி என்பது தெய்வம் உண்டு என்பதை நம்பி, அதனிடம் அளவற்ற அன்பு செலுத்துதல் ஆகும். குழந்தை தாயை நம்புவது போலவும், மனைவி கணவனை நம்புவது போலவும், பார்த்த பொருள்ளைக் கண் நம்புவது போலவும், தான் தன்னை நம்புவது போலவும், தெய்வத்தை நம்ப வேண்டும். பக்தி என்பது கற்பூரம் உருகித் தீய்ந்து ஒன்றுமில்லாமல் காற்றோடு காற்றாய்க் கலப்பது போல, நான் என்ற அகங்காரம் இல்லாமல் உணர்ந்து, உணர்ந்து, உருகி நெகிழ்ந்து இறைவனோடு இரண்டறக் கலப்பதாகும். ஞானமார்க்கம், பக்தி மார்க்கம் என்ற இரண்டும் இறைவனிடம் இட்டுச் செல்லும். ‘‘**தான்’’** என்ற தன் முனைப்பு அறுதலே முக்கியம்.

அன்புருவான சிவனை அடைதற்குரிய மாக்கமும் அன்பே ஆகும்.

‘‘என்பே பிறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகம் குழைவார்க்கு அன்றி
என்பொன் பணியினை எய்த ஒண்ணாதே’’ (திருமந்திரம்)

என, அன்பினால் அகம் குழைந்தால் அன்றி இறைவனை அடைய இயலாது என திருமூலர் கூறுகின்றார்.

‘‘நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்’’ என்கிறார் திருநாவுக்கரசர்.

‘‘பக்திசெய் அடியரைத் பரம்பரத் துய்ப்பவன்’’ என மாணிக்கவாசகர் பக்திநெறி முக்திக்குரிய நெறியாகக் கூறுகின்றார்.

முன்னோர் வழிநின்று பாம்பன் சுவாமிகளும், பக்தியே முக்திக்கு வழி என தம் நூல்களில் கூறுகின்றார் ‘‘நேயத்து அகப்படும் மாய்வற்ற புத்தேள்’’ என்று 58வது வாக்கியமாக ஞான வாக்கியத்தில் நமக்கு எடுத்து உரைக்கின்றார். மேலும் பக்திமையர்க்கும் முக்தி கிடைக்கும் என்று 22வது வாக்கியமாக ஞானவாக்கியத்தில் கூறுகின்றார். அதன் உட்பொருள் ‘‘அழிவற்ற கடவுள் அன்பெனும் பிடியுள் அகப்பட்டுவிடும்’’ என்பதாகும். அது மட்டும் அல்லாமல் ‘‘புயல் போல் மறைக்கினும் வெயிலவன் போல் நில்’’ என்று ஞானவாக்கியம் 86ல் சொல்கின்றார்கள். இதன் உட்பொருள் யாதெனில் ‘‘தன்னை மேகம் மறைத்தாலும் தன்னொளி குன்றாது விளங்கும் சூரியனைப்போல, உலக விவகாரங்கள் உன்னை வந்து மூடினும் ஈசுர பக்தியில் சிறிதும் குன்றாது நிற்க’’ அதாவது இன்னும் விரிவாக உங்களுக்கு புரிய வேண்டுமானால் நாம் பக்தி நெறியில் ஒழுகி இப் பிறவியிலேயே தெய்வீக வாழ்க்கை வாழ்ந்து மேனிலை அடைவோமாக. அதற்கு ஞானபண்டிதனான முருகப் பெருமானின் இன்னருளை வேண்டி நாளும் பிரார்த்திப்போமாக.

‘‘ஞானம் இன்றேல் முத்தி நண்ணாது ஞானமும்
யோகம் இன்றேல் வந்து உதியாது அவ்யோகமும்
மெய்ப்பத்தி இன்றி விளையாது மெய்ப்பத்தி
இன்கருணை இன்று எய்தாதே’’ (திருவலங்கல்திரட்டு, 2 வெள்ளியியல், 47)

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!

என, ஞானம் இல்லாமையானால் முத்தி கிட்டாது. ஞானமும் யோகம் இல்லையானால் வந்து தோன்றாது. அந்த யோகமும் உண்மையான பத்தி இல்லாமல் உண்டாகாது. உண்மையான பத்தியும் இறைவன் கருணையில்லாமல் தோன்றாது என்று சுவாமிகள் கூறுகின்றார். ''பக்தி அதிகமானால் இவ்வுலகில் பற்று ஒன்றும் இல்லையாகும். பக்தி அதிகமானால் செய்தற்கு அரிய யோகமும் அதுவேயாகும். பக்தி அதிகமானால் தலைவன் ஆன முருகனின் ஞானம் (பதிஞானம்) உண்டாகும். பக்தி அதிகமானால் பேரின்ப முக்தி உண்டாகும்'' என்பது மேற்கண்ட பாடலின் உட்கருத்து ஆகும். இதில் சைவ சித்தாந்தத்தின் உட்பொருளும் உணர்த்தி இருப்பதை நாம் உணரலாம்.

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் பக்தியினால் உண்டாகும் பலன்களை ''கண்ணப்பர் கனிவுற்ற பக்தியாலே ஆறு நாளிலே கருப்புகா வீடு பெற்றார்'' என்று சண்முகானந்தசிவம் பதிகத்தில் ஆணித்தரமாக கூறுகின்றார்கள். அது மட்டும் அல்லாமல்

''பக்தர் அருந்தும் பரமசுகம் யான் அருந்த
எத்தனை நாள் செல்லும் இயம்பாய் பராபரமே'' (பராபரக்கண்ணி, 270)

எதற்கும் அஞ்சா நெஞ்சாமாக விளங்கிய பாரதம் போற்றிய பாரதியார் பாடியுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கன:–

''பக்தியினாலே – இந்த
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடீ!
சித்தந் தெளியும் – இங்குச்
செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும் – நல்ல
வீரர் உறவு கிடைக்கும் மனத்திடைத்
தத்துவம் உண்டாம் – நெஞ்சில்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்''

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், ''பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து உயர்நிலை அடையாதார் மரணம் வரப்போகின்றதே என்று பயந்து பயந்து சாவார்கள். பக்தியுடன் இறைவனை மனத்தில் தியானிப்போர் ஞானம் பெற்று உயர்ந்து வெற்றி வெற்றி என்று கூறி இறைவன் திருவடியைச் சேர்வர்'' என்று சிவலோக சுந்தரமாலை என்ற பதிகத்தில் கூறுகின்றார்.

சிலர் செல்வம் மிகுந்து இனிய வாழ்வு வாழும் போது இறைவனைப் பக்தியுடன் வழிபடுவர். செல்வம் நீங்கும் காலத்தோ, இடுக்கண் மிகும் காலத்தோ மனம் திரிந்து, ''நீ கடவுள் அன்று கல்'' என்று வசைபாடுவர். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இத்தகையோரை:–

''செல்வமிருந்தால் வணங்கிச் செல்வம் ஒழிந்தால் விடுவோர்
ஒல்குமிடை வேசியரை ஒப்பார் குருபரனே'' என்று குருபரக்கண்ணியில் விளக்குகின்றார்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் குருவாக இருக்கின்ற அருணகிரிநாதர் பக்தி நெறியில் ஒழுகும் மனிதர்கள் மேம்பாடடைவர் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை என்பதை

''பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தக ஞானசத் திநிபாதா

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!

பக்தி என்ற தூய நெறியில் நாம் செல்லும் போது நமக்கு பல சோதனைகள் நிச்சயம் வரும். அதாவது பொன் நெருப்பிலிடப்பட்டுச் சுடப்படும் போது மாசு நீங்கி மாற்றுயர்ந்த பொன்னாகி ஒளி வீசுவதைக் காணலாம். அதே போல ஒரு கருங்கல், சிற்பியின் கையில் கிடைத்து அதை ஒரு மிகச் சிறந்த விக்கிரகமாக மாறும் போது நாம் அனைவரும் இறைவன் என்று வணங்குகின்றோம். அதுபோல நமக்கு பலப்பல துன்பங்களைக் கொடுத்துச் சோதிக்கினும், முடிவில் அருளானந்தத்தை நல்குவது உறுதி என்று இக் கட்டுரை மூலம் நாம் நிச்சயம் உணரமுடியும். இதனை உணர்ந்து கொண்டால், குருவின் மீது பக்தி கொண்டால் நல்ல ஞானம் கிடைக்கும், நல்ல ஞானம் கிடைத்தால் ஆன்மீகத்தில் உள்ள பேரின்ப வாழ்வை நாம் எளிதில் அடையலாம்.

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!